# தூய லூர்து அன்னை திருப்பீடம்

தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஒ.ஃபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624

(முதல் ஆண்டு)

நாள் 09 - 04 - 2017 இதழ் 20

## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 12:30 மற்றும் மாலை 6:30மணி

| | |
|---|---|
| **சனி** | மாலை 6:00மணி<br>மற்றும் மாலை 7:30மணி |
| **ஞாயிறு (ஆங்)** | காலை 7.30மணி,11.30மணி<br>மற்றும் மதியம் 1:00மணி |
| **ஞாயிறு (தமிழ்)** | காலை 9:30மணி<br>மற்றும் மாலை 6:30மணி |
| **பொது விடுமுறை** | காலை 9:00மணி (ஆங்)<br>காலை10:00மணி(தமிழ்) |

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு**

ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

# குருத்து ஞாயிறு

**முதல் வாசகம் :** எசாயா : 50:4-7

**பதிலுரைப் பாடல் :**
திபா : 22:7-8.16-17a.18-19.22-23

**பல்லவி :** என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?

**இரண்டாம் வாசகம்:**
பிலிப்பியர் 2:6-11

**நற்செய்திக்கு முன் வசனம்:**
“சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.”

**நற்செய்தி வாசகம்:** மத்தேயு 26:14-27:66

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |

## புனித வின்சென்ட் தே பவுல் சபை

புனித வின்சென்ட் தே பவுல் சபையின் வளர்ச்சிக்காக இம்மாதம் முதல் ஞாயிறு இறைமக்கள் அளித்த காணிக்கை $3,607.25 வெள்ளிகள். உங்கள் காணிக்கைக்கு மிகவும் நன்றி.

இம் மாதம் புனித வின்சென்ட் தே பவுல் சபையின் வழியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை $6,000.00 வெள்ளிகள்.

## புனித வார திருவழிபாட்டு நிகழ்வுகள் - 2017

குருத்து ஞாயிறு : ஏப்ரல் 8, 2017, திருப்பலி மாலை 6:00 மற்றும் மாலை 7.30 (ஆங்)
ஏப்ரல் 9, 2017, திருப்பலி காலை 7:30 மணி, 11:30மணி மற்றும் 1:00 மணி (ஆங்கிலம்).
**காலை 9:00 மற்றும் மாலை 6:30 (தமிழ்)**

பெரிய வியாழன் : ஏப்ரல் 13, 2017, மாலை 8:00 மணி
(ஆங்கிலம் மற்றும் தமிழ்)

பெரிய வெள்ளி : ஏப்ரல் 14, 2017, மதியம் 3:00 மணி,
திருச்சடங்குகள் (ஆங்கிலம்)
**மாலை 6:00 மணி - சிலுவைப்பாதை, தொடர்ந்து திருச்சடங்குகள் (தமிழ்).**

பெரிய சனி : ஏப்ரல் 15, 2017, உயிர்ப்புப் பெருவிழா
திருவிழிப்புத் திருப்பலி
மாலை 9:00 மணி (ஆங்கிலம் மற்றும் தமிழ்)

உயிர்ப்பு ஞாயிறு : ஏப்ரல் 16, 2017, திருப்பலி காலை 7:30 மணி, 11:30மணி மற்றும் 1:00 மணி (ஆங்கிலம்).
**காலை 9:30 மற்றும் மாலை 6:30 (தமிழ்).**

புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

## வழக்கமான திருப்பலிகள் இல்லை
**(13-4-17 & 14-4-17)**

13-4-2017 மற்றும் 14-4-2017 அன்று மதியம் 12.30மணி மற்றும் மாலை 6.30மணி திருப்பலி **நடைப்பெறாது.**

## பங்கு அலுவலகம் செயல்படும் நேரம்

பெரிய வியாழன் : ஏப்ரல் 13, 2017
நேரம் : மதியம் 4.00 மணி முதல்
நள்ளிரவு 12.00 மணி வரை.

பெரிய வெள்ளி: ஏப்ரல் 14, 2017
நேரம் : காலை 11.00 மணி முதல்
இரவு 9.30 மணி வரை

பெரிய சனி : ஏப்ரல் 15, 2017
நேரம் : மாலை 4.00 மணி முதல்
இரவு 11.30 மணி வரை

## வாகனங்களை ஆலய வளாகத்தில் நிறுத்த வேண்டாம்

பெரிய வியாழன் : ஏப்ரல் 13, 2017

பெரிய வெள்ளி : ஏப்ரல் 14, 2017

பெரிய சனி : ஏப்ரல் 15, 2017
(உயிர்ப்புப் பெருவிழாத் திருவிழிப்புத் திருப்பலி)




வாகனங்களை ஆலய வளாகத்திற்குள் நிறுத்த வேண்டாம் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## சிந்தனை

அன்புடையீர்,
தவக்காலத்தின் கடைசி ஞாயிறும் குருத்து ஞாயிறுமான இன்று குருத்தோலைகள் ஏந்தி பவனியாக ஆலயம் வந்துள்ள உங்கள் அனைவரையும் எருசலேம் நகரவீதிகளில் மகத்தான தலைவனாகத் தாவீதின் மைந்தனாய் வலம் வந்த இறைமகன் இயேசுவின் இனிய நாமத்தில் அன்புடன் வரவேற்கிறோம். முதல் குருத்து ஞாயிறு அன்று நடந்த போது சூறாவளி ஒன்று எருசலேம் நகரைத் தாக்கியது. காற்று வடிவில் வந்த சூறாவளி அல்ல, கடவுள் வடிவில், கடவுளின் திருமகன் வடிவில் வந்த சூறாவளி. இயேசு எருசலேமில் நுழைந்தபோது, மக்களால் எதேச்சையாக, மானசீகமாக ஊர்வலம் தானாகவே ஏற்பட்டது. இயேசு தன் பணிவாழ்வைத் தொடங்கியது முதல் யூதமதத் தலைவர்களின் அதிகார வாழ்வு ஆட்டம் கண்டது. இந்தத் தலைகீழ் மாற்றங்களின் உச்சக்கட்டம்.. எருசலேம் நகரில் இயேசு ஊர்வலமாய் வந்தது. அந்த மதக் குருக்களின் அரணாக இருந்த எருசலேம் கோவிலில் நுழைந்து, அங்கிருந்த அமைப்பையும் தலைகீழாக்கினார். எனவே இந்தக் குருத்து ஞாயிறு, அதிகார அமைப்புகளைப் பல வழிகளிலும் புரட்டிப் போட்ட ஒரு சூறாவளி தானே! தந்தையாம் கடவுளின் மீது அவருக்கு இருந்த நம்பிக்கை தான் சிலுவைப் பாதையில் பயணிக்க இயேசுவிற்கு எழுச்சியைத் தந்தது. நாமும் இயேசுவின் மீது நம்பிக்கைகொண்டும் நம் அன்றாடச் சிலுவைகளைத் தாங்கி இயேசுவைப் பின்தொடர்வோம். பாடுகளின் வழியாக உயிர்ப்பின் ஒளியைப் பெற இப்புனித வாரத்தில் உருக்கமாக வேண்டுவோம்.

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |

**அருள்தந்தையர்**

அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை

**பங்கு அலுவலகம்**

(ololsec@gmail.com)

இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore

அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.